பக்கங்கள் 19

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 25 புதன்கிழமை 09.07.2025 அதிர்வு 339

## விமல் வீரவன்சவுக்கு சி.ஐ.டியினர் அழைப்பு



தேசிய சுதந்திர முன்னணியின் தலை வரும் முன்னாள் அமைச் சருமான விமல் வீரவன்சவை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்குக் 03



செம்மணியில் நாள்தோறும் வெளிவரும் எலும்புக்கூடுகள்

# நேற்று 4 இதுவரை 56

## 50 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுப்பு

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அங்கு அடையாளம் காணப்படும் மற்றும் மீட்கப்படும் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் 03






## தடயவியல் அகழ்வாய்வுத் தளத்தின் 2 ஆவது பிரதேசமாக புதிய பகுதி பிரகடனம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட யாழ். செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேலும் மனிதப் 03



இலங்கை கடற்படையின் ஓய்வுபெற்ற கொமடோர் எம். பி.என்.ஏ.பெமரத்தினவை கலால் ஆணையாளர் நாயகமாக நியமிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதிய அரசு பதவியேற்றமையை அடுத்து அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த இறைவரித் திணைக்களத்தின் சிறப்பு தர அதிகாரியான யு.எல். உதய குமார பெரேரா, நாளை ஜூலை 10 ஆம் திகதியன்று 60 வயதை எட்டும்போது ஓய்வு பெறுகின்றார்.

அவரது இடத்துக்கே ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரி ஒருவரை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி பரிந்துரைத் 03



## ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு

# நீதி உறுதி

### ஜனாதிபதி அநுர சத்தியம்

"கால ஓட்டத்தில் மூடிமறைக்க இடமளிக்காது உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க தேவையான அனைத்து முயற்சிகளையும் நான் முன்னெடுப்பேன். ஆனால், அது இலகுவான விடயமல்ல என்பதையும் நான் அறிவேன். அரச அதிகாரிகளிடம் அரசே விசாரணையை முன்னெடுக்கும் பலவீனமான நிலை உருவாகியுள்ளது. இது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் இந்த விடயத்தில் நீதி, நியாயம் நிலைநாட்டப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குருத்துவப் பணிவாழ்வின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பு பேராயர் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கௌரவிப்பு விழாவில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

"பின்தங்கியுள்ள சமூகத்தில் மீண்டும் மனிதாபிமானத்தின் உயிரோட்டத்தையும் ஆன்மீகப் பண்புகளையும் கொண்டு வருவதில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் வகிபாகம் முன்மாதிரியானது. சமூகத்தின் நல்வாழ்வு மற்றும் ஆன்மீகத்தை கட்டியெழுப்புவதற்காக பெரும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ள அன்னார், பாரிய சேவையாற்றும் ஒரு ராஜதந்திரி. பைபிளை மிக நன்றாக விளக்கி விடயங்களை முன்வைக்கக்கூடிய ஒரு வேத விற்பன்னர். சமூகத்தை எழுச்சியூட்டும் வலுவான ஆளுமை கொண்ட ஒரு பேச்சாளர் போன்ற பாத்திரங்களுக்கு அப்பால் உண்மையான மனித நேயர்.

நாம் சாதாரணமாக ஆபத்தான நிலையில் இருக்கும் போது பதற்றமடைவோம். ஆனால், கர்தினால் ஆபத்தான நிலையில் பதற்றமடைவதில்லை. விசேடமாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் போது முழு சமூகத்தையும் ஆற்றுப்படுத்தியது இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். கர்தினால் அந்தச் சந்தர்ப்பத்தை முறையாக அணுகினார். கர்தினாலின் ஆற்றுப்படுத்தும் குணத்தில் இருந்து பயனைப் பெற்றுக்கொள்வதை இந்தச் சமூகம் தவறவிட்டுள்ளது. அதனால் இந்தச் சமூகம் அவருக்குக் கடமைப்பட்டுள்ளது.

நாம் சந்திக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கர்தினால் எவ்வளவு மனவேதனையுடன் இருக்கிறார் என்பதை நான் அறிவேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவரது மனதில் கலந்துள்ளது.

சந்திக்கும் அனைத்து சந்தரப்பங்களிலும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் விடயங்களை விசாரிப்பார். அது சில சந்தர்ப்பங்களில் அமைதியான தொனியில் இருக்கும். சில சந்தர்ப்பங்களில் குழப்பத்துடன் இருக்கும். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அழுத்தம் விடுக்கும் வகையில் இருக்கும். ஆனால், அவருக்குத் தனிப்பட்ட எந்தத் தேவையும் இல்லை என்பதை நாம் அறிவோம்.

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதலின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய எண்ணமே எமக்குள்ளது. அது தொடர்பான விசாரணைகளைக் கால ஓட்டத்தில் மூடிமறைக்க இடமளிக்காது நீதியைப் பெற்றுக்கொடுக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் நான் எடுப்பேன் என்பதை கர்தினால் முன்னிலையில் உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன். அது இலகுவான விடயமல்ல. சில சந்தர்ப்பங்களில் அரசு அரச அதிகாளிடமே விசாரணைகளை மேற்கொள்கின்றது. தற்போது அரசே அரச அதிகாரிகளிடம் விசாரணை முன்னெடுக்கும் பலவீனமான நிலையை எதிர்நோக்கியுள்ளது. இதுவே எமது நெருக்கடி நிலைமை. எனினும் நிச்சயம் நீதி வழங்கப்பட வேண்டும். நாம் அதனைச் செய்வோம்." – என்றார்.

இந்த நிகழ்வில் மல்வத்து தரப்பின் அநுநாயக்க வண. நியங்கொட விஜித சிறி தேரர் மற்றும் கலாநிதி வண, ஓமல்பே சோபித நாயக்க தேரர் ஆகியோர் கர்தினாலுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

மகா சங்கத்தினர், சர்வமதத் தலைவர்கள், இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் ஹெரல்ட் அந்தோணி பெரேரா, இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி மொன்சிக்னோர் ரொபர்டோ லுகினி, கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர்களான மெக்ஸ்வெல் சில்வா, அந்தோனி ஜயக்கொடி உள்ளிட்ட கத்தோலிக்க அருட்தந்தைகள், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர்கள், முப்படைத் தளபதிகள், பதில் பொலிஸ்மா அதிபர், வெளிநாட்டுத் தூதுவர்கள் உட்படப் பல பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தார். அதனை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் மாறினாலும் கூட, முன்னைய ரணில் விக்கிரமசிங்க் அரசின் கீழ் மதுபான சாலைகளுக்கான உரிமங்களை பயன்படுத்தி கோடிக்கணக்கான ரூபாவைச் சுருட்டிய அரசியல்வாதிகளின் பெயர் விவரங்கள் இப்போதைக்கு அம்பலமாக மாட்டா என்று கூறப்படுகின்றது.

இப்படி மதுபான உரிமங்கள் வழங்கப்பட்டமை தொடர்பான கடிதப் போக்குவரத்துக்கள் அனைத்தையும் ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்க தாம் பதவியேற்றதும் தமது ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டமையை அடுத்து அவற்றை கலால் திணைக்களத்திடம் இருந்து ஜனாதிபதி செயலகம் பொறுப்பேற்று விட்டது. ஆகையினால் புதிய அதிகாரி கலால் திணைக்களத்தில் பதவி ஏற்றாலும் முன்னைய அரசின் காலத்தில் வழங் கப்பட்ட மதுபான உரிமங்கள் தொடர்பான சூத்திரதாரிகளின் பெயர், விவரங்கள் இப்போதைக்கு வெளிவருவதற்கான சாத்திய கூறுகள் இல்லை என்றே கூறப்படுகின்றது.

☆ ☆ ☆

'வேலிக்கு ஓணான் சாட்சி' என்பார்கள்.

வேலியில் வாசம் செய்கின்ற ஓனான் அந்த வேலியை சார்ந்திருக்கும் . பாது காப்பு உணவு மற்றும் இருப்பிடம் எல்லா வற்றுக்கும். எனவே அதை சாட்சியாக் கினால் அது வேலிக்கு சாதகமாக இருக்குமேயல்லாது நியாமாகவோ உண்மையாகவோ இருக்காது என்பதே இதன் அர்த்தம்.

அப்படி ஒரு சம்பவம் உலக அரசியலில் இப்போது நடந்திருக்கின்றது.

சமாதான நோபல் பரிசுக்குரியவராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் பெயரை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு பரிந்துரைத்திருக்கின்றார் என்று செய்தி வெளியாகி இருக்கிறது.

உலகப் பொலிஸ்காரனான அமெரிக்காவும் அதனுடன் சேர்ந்து இயங்கும் உலக சண்டித்தனக்காரனான இஸ்ரேலும் உலகில் அமைதியைக் குலைத்து, சமாதானத்தை நாசமாக்கி, பேரழிவு தரும் யுத்தங்களை தொடர்ந்து நடத்தி வருகையில், ஒருவருக்கொருவர் முதுகு சொரியும் வேலை போல டொனால்ட் ட்ரம்புக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்க வேண்டும் என்று நெத்தனியாகு பரிந்துரைத்திருக்கின்றார்.

அவ்வளவு தூரத்துக்கு நோபல் பரிசைத் தீர்மானிக்கும் குழு கோமாளியாகிவிட்டதா?

☆ ☆ ☆

ஈஸ்டர் குண்டு தாக்குதல் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கும் கிறிஸ்தவ மக்களுக்கும் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் ஒரு நடவடிக்கையாகத்தான் பிள்ளையான் கைது செய்யப்பட்டார் என்று தென்னிலங்கைக்கு காட்டப்பட்டது. ஆனால் இப்போது விசாரணை வளையம் அந்தத் திசையில் முன்னகரவில்லை என்றும், பிள்ளையான் குழுவினர் முன்னர் செய்த பிற அராஜகங்கள் பற்றிய விடயங்கள் அனைத்தும் துருவி ஆராயப்பட்டு, அவை பற்றியே அவரும் அவரது சாகாக்களும் குடையப்பட்டு வருகிறார்கள் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

விடுதலைப் புலிகளின் காலத்தில், கிழக்கில் அவர்கள் சார்பாக இயங்கிய தொண்டு அமைப்பான தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் (TRO) பணியாளர்கள் ஏழு பேர் வெலிகந்தை இராணுவத் தடை முகாமுக்கு அருகில் வைத்து 2006 இல் கடத்திக் கொல்லப்பட்டு, அவர்களிடம் இருந்து பெருந்தொகைப் பணம் சூறையாடப்பட்டமை வரை பல விடயங்களை இப்போது குற்றப்புலனாய்வாளர்கள் துருவி, நோண்டித் தோண்டி ஆராய்ந்து வருகிறார்கள் என்று கூறப்படுகின்றது.

உப்பைத் தின்றவன் தண்ணீரைக் குடித்துத்தானாக வேண்டும். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

ஆனால், யுத்த காலத்தில் அரசு படைகளுடன் சேர்ந்து துணைப்படை போல இயங்கிய ஏனைய தரப்புகள் எல்லாம் தப்பிவிட, பிள்ளையான் தரப்பு மட்டும்தான் இப்போதைக்கு மாட்டிக் கொண்டிருக்கின்றது போலும் ..!

## விமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அதன் சிறப்பு புலனாய்வுப் பிரிவு 4 இல் ஆஜராகுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்களை இலங்கை சுங்கத் துறை முறையான ஆய்வு இல்லாமல் விடுவித்ததாகக் கூறப்படும் விடயம் தொடர்பாவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2025 ஜனவரி 29 ஆம் திகதி நடைபெற்ற ஊடக சந்திப்பில் சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பாக விமல் வீரவன்ச தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் வாக்கு மூலம் அளிக்க அழைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நேற்று 4...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் நேற்றைய அகழ்வின் போது 4 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 56 ஆக அதிகரித்துள்ளது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 13 ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது 4 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 56 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 50 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.நீதிவான்ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழுவின் ஆணையாளர் மிராக் ரஹீம், காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரனிதா மற்றும் சட்டத்தரணி க.சுகாஷ், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகியிருந்தனர்.

## 2 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதைகுழிகள் இருக்கலாம் என அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட புதிய பகுதி "தடயவியல் அகழ்வாய்வுத் தளத்தின் இரண்டாவது பிரதேசம்" என்று நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிக்கு அருகில் மேலும் புதைகுழி இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் ஒரு பகுதி சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் நீதிமன்ற உத்தரவுக்கமைய யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியாளர்களின் உதவியோடு அகழ்வுப் பணிகள் கடந்த இரண்டாம் திகதி ஆரம்பமாகின.

குறித்த பகுதியில் இடம்பெற்ற அகழ்வின்போது கடந்த 4ஆம் திகதி அன்று சிறுமியின் ஆடை ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்தது. கடந்த 5ஆம் திகதி மண்டையோடு ஒன்று அடையாளம் காணப்பட்ட நிலையில் கடந்த 7ஆம் திகதி மூன்று மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன. குறித்த என்பு எச்சங்கள் துப்பரவு செய்யப்பட்டுள்ளன. அவை தொடர்பான எண்ணிக்கைகள் அறிக்கையிடல்கள் இன்றைய தினத்தில் இருந்து ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் நேற்று குறித்த பகுதி "தடயவியல் அகழ்வாய்வுத் தளத்தின் இரண்டாவது பிரதேசம்" – என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், முன்னர் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பகுதி "தடயவியல் அகழ்வாய்வுத் தளத்தின் முதலாவது பிரதேசம்" ஆகும் என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று நடைபெற்ற அகழ்வுப் பணி

(படங்கள்:- பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

















# மாநகர சபை மற்றும் நகரசபைச் சட்டத்தை தமிழ் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும்

## வடக்கின் உள்ளூராட்சி ஆணையாளருக்கு மகஜர் கையளிப்பு!

மாநகர சபை மற்றும் நகரசபை சட்டத்தை தமிழ் மொழியில் மொழி பெயர்க்க வேண்டும் என்பதை வலி யுறுத்திக் கோரி வடக்கின் உள்ளூராட்சி ஆணையாளர் தேவனந்தினி பாபுவிடம் மகஜர் ஒன்றைத் தாம் கையளித்துள்ளார் என்ச் ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண அமைப்பாளரும் கொழும்பு மாநகர சபையின் உறுப்பினருமான உமாச்சந்திர பிரகாஷ் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறு கையில் –

மாநகர சபை மற்றும் நகரசபை சட்டத்தை தமிழ் மொழியில் மொழி பெயர்க்க வேண்டும் என நாம் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றோம்.

இது தமிழ் பேசும் மக்களுக்கான மொழி உரிமையை உறுதிசெய்யும் ஒரு முக்கிய சட்டமாக இருக்கின்றது.

ஆனால் இன்றுவரை அதற்கான தீர்வு கிடைக்காமையால் மீண்டும் இதை வலியுறுத்தி கடிதம் வடக்கின் உள்ளூ ராட்சி ஆணையாளரிடம் கையளித் துள்ளோம்.




1897 ஆம் ஆண்டு உருவாக்கப்பட சட்டமானது இன்றுவரை திருத்தப்படாத ஒன்றாக இருக்கின்றது. பல வருடங்கள் நடைமுறையில் உள்ள மாநகர சபை சட்டத்தை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும்.

குறிப்பாக இலங்கையின் உள்ளூ ராட்சி மன்றங்களுக்குரிய சட்டங்களை சமகால தேவைக்கமைய வகுக்கும் போது, மாநகர சபைக் கட்டளைச் சட்டம், நகர சபைக் கட்டளைச் சட்டம் ஆகிய வற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது அவசியம்.

இதனால் மாநகர சபைகள் மற்றும் நகரசபைகளின் சட்டங்களை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பது, தமிழ் பேசும் மக்களின் சட்ட உரிமைகளை உறுதி செய்வதோடு, அவர்களின் சட்ட விழிப்புணர்வையும் அதிகரிக்கும்.

இது உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்வதற் கும், அதில் பங்கேற்பதற்கும் உதவும் என நம்புகின்றேன்.

எனவே, மாநகர சபை மற்றும் நகர சபை சட்டத்தை தமிழ் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் அவசியமானது மற்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. – என்றும் தெரிவித்தார்.

இதேவேளை செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தமிழ் மக்களின் உணர்வுகளுடன் ஒன்றினைந்த ஒரு விடயம். இவ்விடையத்தில் பாதிக்கப்பட மக்களுக்கு தீர்வு வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

அந்த வகையில் செம்மணி விவ கரத்தில் நான் கூறும் அல்லது வெளிப் படுத்தும் கருத்தை எனது தலைமை ஏற்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. எனது கருத்தை நிராகரிக்கும் நிலை உருவானால் கட்சியை விட்டு வெளியேறவும் தயங்கமாட்டேன். – என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ரஷ்யப் பிரஜைகளை ஏற்றி வந்த கார் மூதூர் பச்சைநூரில் நேற்று விபத்து!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியில் ரஷ்யப் பிரஜைகளுடன் மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்று மூதூர் பச்சைநூர் பகுதியில் வீதியை விட்டு விலகி வயல்வெளிக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது..

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.



# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சுகாதார அமைச்சருடன் சந்திப்பு

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஃபஹீம் உல் அஜீஸ் எச்.ஐ (எம்) நேற்று முன்தினம் சுகாதார அமைச்சில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவை சந்தித்தார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான நல் உறவை மேலும் மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இரு தரப்பினரும் கவனம் செலுத்தினர்.

நீண்டகால சமூக, பொருளாதார, கல்வி, விளையாட்டு மற்றும் அரசியல் உறவுகள், சுகாதாரம், சுதேச மருத்துவம் அத்துடன் சுற்றுலா மற்றும் மருத்துவ சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளின் எதிர்கால வளர்ச்சி குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இரு நாடுகளின் கலாச்சார விடயங்களை உள்ளடக்கிய ஊடக நிகழ்ச்சிகளின் பரிமாற்றம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களை பரிமாறிக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டது.

பாகிஸ்தான் அரசாங்கம் இலங்கைக்கு உறுதியான ஆதரவை வழங்கும் என்று பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் உறுதியளித்தார்.

கல்வித் துறையில் இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் ஒத்துழைப்பு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது, மேலும் தற்போது பாகிஸ்தானில் உள்ள இலங்கை மாணவர்களுக்கு மருத்துவக் கல்விக்காக உதவித்தொகை வழங்கப்படுகிறது, மேலும் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வித் துறைகளுக்கு இடையே தற்போதுள்ள ஒத்துழைப்பை மேம்படுத்துவது மற்றும் தொழிற்கல்வித் துறையில் மாணவர்களுக்கு சிறந்த தொழிற்கல்வி பயிற்சியை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இந்தச் சந்திப்பின் போது இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வலுவான உறவு மேலும் உறுதிப்படுத்தப்பட்டது,

இந்த நிகழ்வில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை துணை அமைச்சர் ஹன்சகா விஜேமுனி, சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்கமற்றும் வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் இலங்கையில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிக ராலய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நல்லூர் பிரதேச சபை பிரிவில் இயங்கும் விடுதிகளைப் பதிவு செய்யக் கோரிக்கை

விடுதிகளைப் பதிவு செய்யுமாறு நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளுக்குள் காணப்படும் அனைத்து விடுதிகள், தனியார் மாணவர் விடுதிகள், வீடுகளில் அறை கொடுத்து பணம் பெற்றுக்கொள்ளும் வீட்டின் உரிமையாளர்கள் மற்றும் வீடுகளை நாளாந்த, வாரந்த, மாதாந்த அடிப்படையில் வாடகைக்கு வழங்குபவர்கள் அனைவரும் எதிர்வரும் 30.07.2025 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்னர் நல்லூர் பிரதேச சபையில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை நல்லூர் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம், கொக்குவில் உப அலுவலகம், நல்லூர் உப அலுவலகம் ஆகியவற்றில் பெற்றுக்கொள்ள முடியும். பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவங்களினை பூரணப்படுத்தி எதிர்வரும் 30.07.2025 புதன் கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட அலுவலங்களில் ஒப்படைக்க வேண்டும்.

நல்லூர் பிரதேச சபையின் இந்தப் பகிரங்க அறிவித்தலை உதாசீனம் செய்து தங்களுடைய விடுதிகளை நல்லூர் பிரதேச சபையில் குறித்த காலப்பகுதிக்குள் பதிவு செய்யாமல் இருப்பவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ளும்.

அருகில் காணப்படும் விரைவு எதிர்வினை முகவரியினை


ஊடக வெளியீடு
මාධ්‍ය නිවේදනය
PRESS RELEASE

நல்லூர் பிரதேச சபை
නල්ලූර් ප්‍රාදේශීය සභාව
NALLUR PRADESHIYA SABHA

07.07.2025

**விடுதிகளைப் பதிவு செய்தல்**

(OR Code) வருடல் (Scan) செய்வதன் மூலமும் விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கிக் கொள்ளமுடியும் – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## படிக்க வேண்டிய நீதி

இலங்கையின் முதல் நிலை நீதிமன்றங்களான நீதிவான் நீதிமன்றங்கள் ஆள்களை விளக்க மறியலில் வைத்திருக்க உத்தரவிடுவது தொடர்பில் ஒரு முக்கிய அவதானிப்பை நாட்டின் மிக உச்ச மேனிலை நீதிமன்றமான உயர் நீதிமன்றம் வெளியிட்டிருக்கின்றது.

பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ, நீதியரசர்கள் துரைராஜா, யஸந்த கோட்டாகொட ஆகியோர் அடங்கிய ஆயம் இந்த அவதானிப்பை வெளியிட்டு இருக்கின்றது

சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கும் படி பொலிஸார் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் வெறுமனே செயல்பாட்டு ரீதியாக - இயந்திரத்தனமாக - செயல்படாமல், நியாயமான முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியம். அது குறித்து நீதிவான்களுக்குப் பாடம் போதிக்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டிருப்பதாக உயர் நீதிமன்றம் கூறியிருக்கின்றது.

உயர்நீதிமன்றத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அவதானிப்பாக இந்த விடயம் பார்க்கப்படுகின்றது.

காட்டு யானைகள் தங்கள் கிராமங்கள் மற்றும் வயல்களின் மீது படையெடுப்பதைத் தடுப்பதில் அதிகாரிகள் அசிரத்தையாக இருக்கிறார்கள் என்று தெரிவித்து, ஒரு கிராம மக்கள் நடத்திய போராட்டம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு நபர்களை விளக்க மறியலில் வைக்கும்படி பொலன்னறுவை நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவின் மீதான தீர்ப்பிலேயே உயர் நீதிமன்ற ஆயம் இப்படி நீதிவான்களுக்குப் பிணை வழங்குவது தொடர்பில் சரியாகப் பாடம் படிப்பிக்கப்பட வேண்டும் என்று கருத்துக் கூறி இருக்கிறது.

அந்த இரு நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டமை சட்டரீதியாக நோக்கினால் தவறு அல்ல என்று உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தாலும், அந்த விளக்கமறியல் உத்தரவு குறித்து உயர்நீதிமன்றம் தனது அதிருப்தியை வெளிப்படுத்தத் தவறவில்லை.

"ஒரு நீதிவான் பிணை வழங்க மறுத்து சந்தேக நபரை தடுப்புக் காவலில் வைப்பது சட்டபூர்வமானது என்றாலும், பொலிஸாரின் வெறும் வேண்டுகோளுக்காக அல்லாமல், மாறாக குற்றவியல் நீதியின் நோக்கங்களுடன் ஒத்துப்போகும் செல்லுபடியாகும் காரணங்களுக்காக அவர் அவ்வாறு செய்ய வேண்டும். நீதித்துறையும் மக்களின் அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்தக் கடமைப்பட்டுள்ளது என்பதையும், சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட செல்லுபடியாகும் காரணங்களுக்காக விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே அத்தகைய உரிமைகளைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என்பதையும், சட்டத்தால் வழங்கப்பட்ட முறையில் அத்தகைய முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதையும் நீதிவான்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும்" என்று அந்த ஆயம் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

விளக்க மறியல் சந்தேக நபர்களை தடுத்து வைத்திருப்பதற்கான நமது சிறைச்சாலைகள் 'சுத்தமான சூசைப் பிள்ளைகளின் விடுதிகள்' அல்ல. தண்டனை விதிக்கப்பட்ட 'கிரிமினல்' கைதிகளும், ஐ.ஆர். சீக்களும் கூட அங்கேதான் 'குடிகொண்டு' இருக்கிறார்கள். வெறுமனே சந்தேகத்தின் பேரில் நபர்களை - குறிப்பாக இளைஞர்களை - சிறைக்குள் வாரக் கணக்கில் அல்லது மாத கணக்கில் - முடக்குவது - சிக்க வைப்பது - அந்த இளைஞர்களின் எதிர்கால வாழ்வை சிதிலமான திசைகளை நோக்கி திசை திரும்ப வழி செய்துவிடும் ஆபத்து இருப்பதையும் நீதிவான்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். சும்மா இருந்த இளைஞர்களை விளக்கமறியலின் பேரில் சிறைக்கூண்டில் ஏனைய கைதிகளோடு சேர்த்து அடைப்பதன் மூலம், முறையற்ற சமுதாயமுன்று உருவாகுவதற்கு நீதிமன்றங்களே காலாகி விடக்கூடாது.



# புத்தளத்தில் டச்சுப் பாலம் திறப்பு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தின் மதுரங்குளி – தொடுவா பிரதான வீதியின் கடையாமோட்டை (டச்சுப் பாலம்) பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலம் அரசியல் பிரமுகர்களால் மக்கள் பாவனைக்காக நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

மதுரங்குளி பிரதேசத்தில் மிக நீண்ட கால வரலாற்றைக் கொண்ட மிகவும் பழமைவாய்ந்த இந்தப் பாலம் நீண்ட காலமாக உடைந்து பழுதடைந்து காணப்பட்டமையினால் இந்த பாலத்தின் ஊடாக நாளாந்தம் போக்குவரத்து மேற்கொள்ளும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும், நூற்றுக்கணக்கான வாகன சாரதிகளும் பெரிதும் சிரமத்திற்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில், பாலத்தின் நிர்மாணப்பணிகள் முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அது இடைநிறுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த வருடம் மார்ச் மாதம் முதல் பாலத்தின் புனரமைப்பு பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. 30 மீட்டர் நீளமும், 9.2 மீட்டர் அகலமும் கொண்ட இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்காக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக நெதர்லாந்து அரசாங்கம் 191 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய் திருந்தது.

இந்தப் புதிய பாலத்தின் திறப்பு விழா நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கயன் ஜானக, முஹம்மது பைசல், புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத், கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் ஏ.எஸ்.எம். ரிகாஸ், பிரதித் தலைவர் சமன் குமார, மதுரங்குளி வர்த்தக சங்கத் தலைவர் எம்.எஸ். ரி.அமான் , மதுரங்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் காமினி விக்ரமசிங்க மற்றும் புத்தளம், கற்பிட்டி பிரதேச சபைகளின் ஆளும் கட்சி உறுப்பினர்கள், பொறியியலாளர்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

இந்தப் பாலத்தின் நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது, மக்களின் போக்குவரத்துக்காக மதுரங்குளி வர்த்தக சங்கம் மற்றும் தனவந்தர்களின் நிதிப் பங்களிப்பில் பாலத்திற்கு அருகில் தற்காலிக வீதி ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# பொலிஸாரின் சமிக்ஞையை மீறிய டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிச்சூடு

பொலிஸாரின் சமிக்ஞையை மீறிப் பயணித்த மணல் ஏற்றிய டிப்பர் வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி – தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிக்கொண்டு பயணித்த டிப்பர் வாகனம் மீதே துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்தைப் புளியம்பொக்கனைச் சந்தியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் பொலிஸார் மறித்துச் சோதனை செய்ய முற்பட்டுள்ளனர்.

இதன்போது வாகனம் சமிக்ஞையை மீறிச் சென்ற நிலையில் பொலிஸார் அதனை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் டிப்பர் வாகனத்தின் சில்லு சேதமடைந்ததால், வாகனத்தைச் சாரதி அந்த இடத்தில் விட்டுவிட்டு தப்பியோடியுள்ளார். மணல் மற்றும் டிப்பர் வாகனத்தை மீட்ட பொலிஸார், சாரதியைத் தேடி வருகின்றனர்.



# கைத்துப்பாக்கி, ஹெரோயினுடன் ஒருவர் கைது!

கைத்துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு, 20 ஆவது மைல்கல் பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு மேற்படி நபர் நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜா – எல பகுதியை சேர்ந்த 47 வயதுடைய நபரே கைதானவர் ஆவார்.

அவரிடம் இருந்து கைத்துப்பாக்கி, 4 தோட்டாக்கள் மற்றும் 9 கிராம் 715 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.











# கடற்படைத் தலைமையகத்திற்கு இராணுவ தளபதி நேற்று விஜயம்

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ நேற்று செவ்வாய்க்கிழமை கடற்படைத் தலைமையகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார். கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனாகொடவுடன் அவர் உத்தியோகபூர்வ சந்திப்பிலும் ஈடுபட்டார்.

கடற்படை தலைமையகத்துக்கு வருகை தந்த இராணுவத் தளபதிக்கு இலங்கை கடற்படையின் உயரிய மரியாதையுடன் கடற்படையின் வரவேற்பு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கடற்படை தளபதி, கடற்படையின் பிரதிப் பிரதானி உள்ளிட்ட கடற்படை முகாமைத்துவ சபையை இராணந்த் தளபதிக்கு அறிமுகப்படுத்தினார் .

இராணுவ மரபுகளின் படி, நடைபெற்ற இந்த உத்தியோகபூர்வ சந்திப்பின் போது இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து இராணுவத் தளபதி மற்றும் கடற்படை தளபதிக்கிடையில் சுமூகமான கருத்து பரிமாற்றம் நடைபெற்றது. தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில் இலங்கை இராணுவம் மற்றும் கடற்படையின் முக்கிய பங்களிப்பு குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

சகோதர படைகளுக்கிடையிலான பிணைப்பு, கௌரவமான ஒற்றுமை மற்றும் சேவை ஒத்துழைப்பை வலுப்படுத்திக் இந்த உத்தியோகபூர்வ சந்திப்பைக் குறிக்கும் வகையில் இரு தரப்பினருக்கிடையில் நினைவு பரிசுகளும் பரிமாற்றம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.









# யாழ். வலிகாமம் தெற்குப் பிரதேச சபையில் செயலாளருடன் முரண்பட்ட உறுப்பினர்கள்

யாழ். வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்று சபையின் தவிசாளர் திராகராசா பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சபையின் தீர்மானங்களுக்கு மாறாக, தவிசாளருக்கும் தெரிவிக்காமல் செயலாளர் தன்னிச்சையாக செயல்படுகின்றார் என உறுப்பினர்கள் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இதனால் சபையின் ஆரம்பத்தில் குழப்பமான நிலை ஏற்பட்டதை அடுத்து தவிசாளரால் சபை அமர்வு 20 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டு பின்னர் சபை அமர்வு மீள ஆரம்பமானது.

இதன்போது சபையின் செயலாளர் சபை தீர்மானங்களுக்கு எதிராக செயல்படுகின்றார் என உறுப்பினர்கள் மீண்டும் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

அத்தோடு சபையில் கடந்த இரண்டு வருடங்களாக இடம்பெற்ற ஊழல் தொடர்பில் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என செயலாளரிடம் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

மேலும் தான் சொல்வதை கேட்காவிட்டால் நீங்கள் வெளியேறுங்கள் என தவிசாளர் செயலாளரிடம் தெரிவித்தார்.

அத்தோடு சபை தீர்மானத்தின் படி நேர்த்தியான ஒழுங்குகளில் மீள சாரதிகள் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டு தவிசாளரால் அறிவிக்கப்பட்டது.

இறுதியாக பிரதேச சபையின் உப குழுக்கள் அமைக்கப்பட்டு அதற்கான தலைவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கிடையில் தலைவர் பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அந்த வகையில் நிதி குழு மற்றும் பெறுகைக் குழுவின் தலைவராக சபையின் தவிசாளரும், திட்டமிடல் குழுவின் தலைவராக செல்வராசா கஜேந்திராவும், சுகாதாரக் குழுவின் தலைவராக தவராசா துவாரகனும், மயான அபிவிருத்தி குழுவின் தலைவராக வரதராஜா தனகோபியும், சனசமூக நிலைய ஒருங்கிணைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் தலைவராக குணராஜா டெனிஸ் கமல்ராஜ் , மகளிர் மற்றும் சிறுவர் குழுவின் தலைவராக சின்னராசா ரஜீபாவும் தெரிவு செய்யப்பட்டனர்.
















# ‘ஈழநாடு’ காசிலிங்கத்தின் ‘அமுதவிழா’ மலர் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பட்டது

“ஈழநாடு” எஸ்.கே.காசிலிங்கத்தின் “அமுதவிழா” சிறப்பு மலர் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

1959 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவர ஆரம்பித்த “ஈழநாடு” பத்திரிகையில் தனது இளம் பருவத்திலேயே பணியில் இணைந்தவர் எஸ்.கே.காசிலிங்கம்.

1967ஆம் ஆண்டு உதவி ஆசிரியராகப் பணி தொடங்கிய எஸ்.கே.காசிலிங்கம், 1981 ஆம் ஆண்டு வரை அங்கேயே நீடித்தார்.

66 வருடங்களுக்கு முன்னரான ஈழத்தின்பத்திரிகைத்துறைவரலாறுகொழும்பு தமிழ்ச்சங்கத்தில் பேசப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டாவது பத்திரிகையாகவும் முதலாவது நாளாந்தப் பத்திரிகையாகவும் 1959 ஆம் ஆண்டு “ஈழநாடு” வெளிவந்தது.

இராஜ அரியரட்ணம், கே.பி.ஹரன், எஸ்.எம்.கோபாலரட்ணம் (கோபு) ஆகிய பத்திரிகைத்துறையின் பெரும் ஆளுமைகள் “ஈழநாடு” ஆசிரியபீடத்தை அலங்கரித்தார்கள்.

அவர்களின் வழி நடத்தலில் பத்திரிகைத்துறையில் பயணித்தவர் எஸ்.கே.காசிலிங்கம். 1981 வரை பணியாற்றினார்.

பிரான்ஸில் “பரிஸ் ஈழநாடு” நிர்வாகியாகவும் பின்னர் “தமிழன்” பத்திரிகையின் ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

எஸ்.கே.காசிலிங்கம் அவர்களின் அகவை 80ஐ முன்னிட்டு கடந்த 25.05.2025 அன்று பரிஸ் மாநகரில் அமுத விழா நடைபெற்றது. இதில் ஒரு சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

இந்த மலரில் பத்திரிகைத்துறை சார்ந்தவர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள் எனப் பல ஆளுமையாளர்கள் வாழ்த்துகளைப் பதிவு செய்துள்ளமையுடன், எஸ்.கே.காசிலிங்கத்தின் ஆளுமைகள் பற்றியும் விளக்கியுள்ளனர்.

இந்த மலர், காசிலிங்கம் பற்றியதானது மாத்திரமன்றி “ஈழநாடு” பற்றியதாகவும் அமைந்துள்ளது.

எஸ்.கே.காசிலிங்கத்தின் “அமுதவிழா” சிறப்பு மலர் வெளியீடு, கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நேற்று முன்தினன் திங்கட்கிழமை சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ.தனபாலசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பத்திகையாளர்கள், கலை, இலக்கியவாதிகள், கருத்துரை வழங்கினர்.

“பூபாலசிங்கம் புத்தகசாலை” ஆதரவில் “உலகத்தமிழ்க்கலையகம்” முன்னெடுத்த இவ்விழாவை முன்னோடிகள் இலக்கிய வட்டம் ஒருங்கிணைத்து நடத்தியது.

எழுத்தாளர் வி.ரி.இளங்கோவன், வரலாற்று ரீதியாக வடபுலத்தில் பத்திரிகைகளின் வளர்ச்சி, ஈழநாடு பத்திரிகையின் எழுச்சி, பங்களிப்பு, அமுதவிழா நாயகனின் பணிகள் குறித்து சிறப்பாகக் குறிப்பிட்டார்.

கலை இலக்கியவாதிகளைக் கௌரவிக்கும் உலகத் தமிழ்க் கலையகத்தின் பணி பாராட்டுக்குரியது என்றார் அவர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மல்லியப்பு திலகர், சிறப்பு மலரைச் சிறந்த முறையில் ஆய்வு செய்து உரையாற்றினார். பத்திரிகை, அரசியல், வரலாறு என வகுத்து மலரின் சிறப்புகளை எடுத்துக் கூறினார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர், சட்டத்தரணி சுகந்தி இராஜேந்திரா, அன்றைய ஈழநாடு பத்திரிகையின் சிறப்புகளையும், அதனால் மக்களுக்குக் கிடைத்த நன்மைகளையும் சிறப்பாகச் சொன்னார்.

இலக்கிய சமூக ஆய்வாளர் மதுசூதனன், கல்வியாளரும் எழுத்தாளருமான கந்தையா பத்மானந்தன், பத்திரிகையாளர் ஜீவா சதாசிவம், சட்டத்தரணி க.குமார், பத்திரிகையாளர் பொன்னுத்துரை ஆகியோரும் உரையாற்றினர்.

அமுத விழா நாயகன் தனக்கு வழங்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி கூறினார்.

பத்திரிகையாளர்கள் உட்பட அதிகமானோர் கலந்துகொண்ட இந்நிகழ்வில், சிறப்பு மலரை வி.ரி.இளங்கோவன் வெளியிட்டு வைத்தார். நிகழ்வில் பங்கு பற்றிய அனைவரும் மலரினை மகிழ்வுடன் பெற்றுச் சென்றனர்.



# நாட்டில் பற்றாக்குறை இருக்கும்வரை அபிவிருத்தி செய்வது என்பது கஷ்டம்

## வே.இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு



“நாட்டில் பற்றாக்குறை இருக்கும் வரை நாட்டை அபிவிருத்தி செய்வது கஷ்டமான விடயமாகும். அதனால் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஇடம் பெற்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 3857 பில்லியன் என்பதுடன் இறக்குமதி வருமானம் 5685 பில்லியன். பற்றாக் குறையாக இருப்பது 1828 பில்லியனா கும். நாங்கள் ஏற்றுமதியைவிட இறக்கு மதிக்கு அதிக முன்னுரிமை வழங்குகி றோம். அதிகமான உணவுப்பொருள் கள் இறக்குமதி செய்யும் நிலையே காணப்படுகிறது.

இந்த விடயத்தில் அரசாங்கங்கள் ஒரு திட்டமிடல் இல்லாமல் செயற்பட்டு வந்ததாலே இவ்வாறு இறக்குமதி செய் யப்படுகிறது. எமது நாட்டில் இரண்டுவித மான பற்றாக்குறைகள் இருந்து வருகின் றன. ஏற்றுமதி, இறக்குமதியிலும் பற்றாக் குறை இருக்கிறது.

அதேபோன்று வரவு செலவு திட்டத் திலும் பற்றாக்குறை இடம்பெற்று வருகி றது. இவ்வாறு பற்றாக்குறை இருந்து வரும் பட்சத்தில் நாட்டை அபிவிருத்தி செய்வது மிகவும் கஷ்டமான விடயமாகும். அதனால் இந்த பற்றாக்குறையை நீக் குவதற்கு தேவையான விடயங்கள் என்ன என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் அரசாங்கங்க ளில் ஊழல் மோசடிகள் இருந்தமையால் இந்த பற்றாக்குறை இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது. தற்போது அவ்வா றான எதவும் இல்லை. அதனால் இந்த பற்றாக்குறையை நீக்குவதற்கு அரசாங் கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்கு அரசாங்கத்துக்கு நல்ல முகா மைத்துவம் இருக்க வேண்டும். ஆனால் இன்று அரச அதிகாரிகள் பணியாற்று வதற்கு அச்சப்படுகின்றனர். ஏதாவது பிரச் சினை ஏற்பட்டால் அவர்களுக்கு சிறைக்கு செல்ல வேண்டி ஏற்படும் என அச்சப்ப டுகின்றனர். அதனால் அவர்கள் துணிந்து செயற்படுவதற்கு முடியுமான அதிகா ரத்தையும் அவர்களுக்கும் வழங்க வேண்டும்.

மேலும் ஈரான் இஸ்ரேல் மோதல் காரணமாக எமது தேயிலை ஏற்றுமதிக்கு தடங்கல் ஏற்பட்டுள்ளன. அதேபோன்று ஏற்றுமதியில் இரண்டாம் இடத்தில் இருப்பது ஆடைஉற்பத்தியாகும். ஆனால் இன்று அமெரிக்காவின் வரி அதிக ரிப்பால் ஆடை உற்பத்தி தளம்பல் நிலைக்கு சென்றுள்ளது.

அமெரிக்காவின் வரி அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் பேசியிருப்பதாக தெரிவிக்கப்பட்டாலும் அது தொடர்பில் இதுவரை எந்த பிரதிபலிப்பையும் காண வில்லை என்றே தெரிவிக்க வேண்டி இருக்கிறது.

அமெரிக்காவின் வரி விதிப்பு 44 வீதம் தான் என அறிவிக்கப்பட்டால் எமது நாட்டின் ஆடைத்தொழிற்சாலைகளுக்கு என்னவாகும் என்பது கேள்விக்குரியா கும். அதனால் நாட்டின் பிரச்சினை களை தீர்ப்பதற்கான பொறுப்புவாய்ந்த அரசாங்கமாக இந்த அரசாங்கம் திகழ வேண்டும்.

தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்பட்டால் அந்த தொழிலில் இருப்பவர்கள் பல வேறு துன்பங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும். அவர்களுக்கு போது மான சம்பளம் இல்லை. ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் 1700 ரூபா வழங்குவ தாக தெரிவிக்கிறார்கள்.

ஆனால் இதுவரை 1300 ரூபாவுக்கு மேல் சம்பளம் வழங்கப்படவில்லை. அதனால் தோட்ட மக்களின் சம்ப ளத்தை அதிகரித்துக்கொடுக்க அரசாங் கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது அடிப்படை பொருள்களின் விலை அதிகரிப்பால், அவர்களின் வாழ்க்கைச்செலவை கொண்டுசெல்ல 1700 ரூபாவும் போதுமானதாக இல்லை.

மேலும் அரசாங்கம் வாகன இறக்கு மதி செய்ய ஆரம்பித்துள்ளதால் டொலர் இல்லாமல் போகும் என சிலர் தெரிவிக் கின்றனர். டொலருக்கு பற்றாக்குறை ஏற்பட்டதால் கடந்த காலங்களில் எமக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்க ளையாவது இறக்குமதி செய்ய முடியாமல் போனது அந்த நேரத்தில் இந்தியாவே எமக்கு உதவி செய்து, 4 பில்லியன் ரூபா வழங்கி எமக்கு உதவி செய்தது. அதனால் மீண்டும் அவ்வாறானதொரு நிலை மையை ஏற்படுத்திவிடாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும் எமது விவசாயிகள் இன்று பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். குறிப்பாக கிழங்கு, வெங்காயம், அரிசி உற்பத்தி செய்யப்பட்டு அறுவடை செய்யும்போது அரசாங்கம் அந்த பொருட்களை இறக் குமதி செய்கிறது.

இதனால் எமது விவசாயிகள் பாதிக் கப்படுகிறார்கள். இதனை அரசாங்கம் உணர்வதில்லை. நுகர்வோருக்கு குறைந்த விலைக்கு வழங்குவதற்கு இவ்வாறு செய்வதாக தெரிவித்து, உள்ளூர் விவசாயம் பாதிக்கப்பட்டால் எதிர்காலத்தில் அனைத்து பொருள்க ளும் இறக்குதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.”– என்றார்.

# வடக்கு, கிழக்கில் முப்படையினர் காணி அபகரிப்பில் ஈடுபடுகின்றனர்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கில் காணிகள் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப் பிட்டாலும் முப்படையினர் பல்வேறு வழிகளில் காணி அபகரிப்பு செயற்பாடு களில் ஈடுபடுகிறார்கள் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல் வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எமது மக்களின் இருப்பதைதக்கவைத் துக் கொள்வதற்காக நில அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் தொடர்ந்து ஈடு பட்டு வருகிறோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முப்படைகளிலும் பல்வேறு வழிகளில் நில அபகரிப்பில் ஈடுபடுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்க ளில் பொது காணிகளில் உள்ள மர கிளையை தமிழர் ஒருவர் வெட்டினால் அவர் கைது செய்யப்பட்டு, அவர் சிறைக்கு செல்ல நேரிடும் ஆனால் வடக்கில் மகா வலி வலயத்துக்குட்பட்ட 600 ஏக்கர் காணியை பெரும்பான்மை இனத்தை சேர்ந்த ஒருவர் சட்டவிரோதமான முறை யில் வெற்றிடமாக்கியுள்ளார்.

வவுனியா ஓமந்தை பொலிஸ் நிலை யத்துக்கு முன்னாள் உள்ள தனியார் காணி ஒன்றை பொலிஸார் துப்பரவு செய்துள்ளனர். காணி அபகரிப்பு நிறுத் தப்படும். காணி விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் பொலிஸார், முப்படையினர் காணி அபகரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள்.

இதன்போது எழுந்து கருத்துரைத்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



ஆனந்த விஜேபால, ஓமந்தை பொலிஸ் நிலையம் தொடர்பில் இன்று காலையில் அறிந்தேன். இவ்விடயம் தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித் தேன். அந்த காணி துப்பரவு செய்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.” என்றார்.



# வாகன இறக்குமதியை கட்டுப்படுத்த எந்த முடிவும் எடுக்கப்படவில்லை

## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

நாட்டின் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்த எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சில ஊடக அறிக்கைகளை மறுத்துள்ள மத்திய வங்கி இந்த விடயத்தை தெளிவுபடுத்தியுள்ளது.

அந்தவகையில், வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக மத்திய வங்கிக்கும், திறைசேரிக்கும் இடையில் கடிதப் பரிமாற்றம் எதுவும் இடம்பெறவில்லை என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டின் வணிக வங்கி அமைப்பில் கிடைக்கும் டொலர் இருப்புகளிலிருந்தே, வாகன இறக்குமதிகள் செய்யப்படுகின்றன.

எனவே, வாகன இறக்குமதியின் போது, வெளிநாட்டு இருப்புக்களைப் பாதிக்காது என்றும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.




# உத்தியோகபூர்வ சொத்து இருப்பு 3.3 சதவீதத்தால் சரிவடைந்தது

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இலங்கையின் உத்தியோகபூர்வ சொத்துகளின் இருப்பு 3.3 சதவீதத்தால் சரிவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள பொருளாதார குறிகாட்டியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த ஜூன் மாதத்தில் இலங்கையின் உத்தியோகபூர்வ சொத்துகளின் இருப்பு 6.08 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

அதேநேரம் 2025 மே மாதம் உத்தியோகபூர்வ சொத்துகளின் இருப்பு 6.28 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவானது.

அந்நிய செலாவணி இருப்பு 6,231 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 6,023 மில்லியன் அமெரிக்க டொலராக குறைவடைந்தமையின் காரணமாகவே, இலங்கையின் உத்தியோகபூர்வ சொத்துகளின் இருப்பு சரிவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# லலித், குகன் காணாமல் போனமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சபையில் தெரிவிப்பு



லலித், குகன் ஆகியோர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நஜீத் இந்திக்கவின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ஆனந்த விஜேபால மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசாரணையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று கூறிய அமைச்சர் ஆனந்த விஜேபால, அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 17 சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்திற்கு வழக்குத் தொடர்பான உண்மைகளைப் பதிவு செய்துள்ளார் என தெரிவித்தார்.

வழக்கின் முன்னேற்றம் ஜூன் 3, 2025 அன்று பதில் பொலிஸ்மா அதிபர் அச்சுவேலி பொலிஸ் மற்றும் யாழ்ப்பாணப் பிரிவு குற்றப்பிரிவு அதிகாரிகளிடம் விசாரித்தார். அதன்படி, வழக்கு தொடர்பான அனைத்து கோப்புகளும் ஜூன் 11, 2025 அன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதாக ஆனந்த விஜேபால கூறினார்.

இந்த விசாரணையை இனிமேல் சி.ஐ.டியின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு கையாளும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் முறையீடு செய்வதற்குத் தொலைபேசி இலக்கம்

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடு அளிப்பதற்கு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் 109 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்து.

சிறுவர்களை யாசகம் மற்றும் கடின மான தொழில்களில் ஈடுபடுத்துதல், துன்புறுத்துதல், துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸாருக்கு உடனடியாக தகவல் வழங்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்து.

சிறுவர்களை பாதுகாப்பது சமூகத்தின் பாரிய பொறுப்பாகும் என்றும் எனவே, சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.





# பாடசாலை வான் மீது ரயில் மோதிய விபத்து

## கடலூரில் 3 மாணவர்கள் பலி

இந்தியாவின் கடலூரில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற வான் ஒன்றுரயிலுடன்மோதிவிபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 3 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்தின்போது அந்த வானில் 5 பேர் பயணித்துள்ளனர் என தெரிவிக்கப் படுகின்றது.

இந்தநிலையில், விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்குத் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 5 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்குவதாக அறிவித்துள்ளார்.

# இந்தியாவின் பெரும் பணக்காரர்கள் பட்டியல் முகேஸ் அம்பானி தொடர்ந்தும் முதலிடத்தில்

இந்தியாவின் முதல் 10 இடங்களிலுள்ள பெரும் பணக்காரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, ரிலையன்ஸ் நிறுவனத்தின் தலைவர் முகேஸ் அம்பானி முதலிடம் பெற்றுள்ளார்.

அவரின் மொத்த சொத்து மதிப்பு சுமார் 115.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பணக்காரர்களில் இந்தியளவில் முதல் இடத்திலும் உலகளவில் 15 ஆவது இடத்திலும் அவர் பட்டியலிடப் பட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் முதலீடுகளை மேற்கொண்டுள்ள அதானி நிறுவனத்தலைவர் கௌதம் அதானி, இந்திய பணக்காரர்களில் இரண்டாம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

அவரின் சொத்து மதிப்பு 67 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் அவர் 24ஆவது பணக்காரராக விளங்குகிறார்.



## அகமதாபாத் விமான விபத்து;

# முதற்கட்ட விசாரணை அறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது

அகமதாபாத் விமான விபத்து தொடர்பாக விசாரணை மேற்கொண்ட புலனாய்வு அமைப்பு (ஏ.ஏ.ஐ.பி.) தனது முதற்கட்ட அறிக்கையை சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்திடம் வழங்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

குஜராத்தின் அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து லண்டன் புறப்பட்ட ஏர் இந்தியாவின் போயிங் 787-8 ட்ரீம்லைனர் விமானம் கடந்த ஜூன் 12 ஆம் திகதி விபத்தில் சிக்கியது. இதில் விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மட்டும் உயிர் பிழைத்தார். விமானம் மருத்துவக் கல்லூரி விடுதியில் மோதியதில் மருத்துவ மாணவர்கள் உட்பட 33 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து குறித்து விமான விபத்துக்கான புலனாய்வு அமைப்பு விசாரணை நடத்தி வருகிறது. இதில், இந்திய விமானப் படை, இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட், அமெரிக்க தேசிய போக்குவரத்து பாதுகாப்பு வாரியம் ஆகியவற்றின் தொழில்நுட்ப வல்லுநர்கள் இடம்பெற்றுள்ளனர். புலனாய்வு அமைப்பின் இயக்குநர் ஜெனரல் தலைமையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

விமான விபத்துக்கான காரணத்தை கண்டறியும் விமானத்தின் கறுப்பு பெட்டி கடந்த ஜூன் 13 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. விமானம் மோதிய விடுதியின் ஒரு கட்டடத்தின் கூரையில் இருந்து அது கண்டெடுக்கப்பட்டது. இதில் 'காக்பிட் வாய்ஸ் ரிக்கார்டர் (சி.வி.ஆர்) மற்றும் பிளைட் டேட்டா ரிக்கார்டர் (எப்.டி.ஆர்) என்ற இரு சாதனங்கள் இருக்கும். சி.வி.ஆர். சாதனத்தின் விமான அறையில் நடைபெற்ற உரையாடல்கள் பதிவாகும். எப்.டி.ஆர். சாதனத்தின் விமானம் பறந்த உயரம், வேகம், விமானி இயக்கிய விதம் உட்பட ஏராளமான தகவல்கள் சுமார் 25 மணி நேரத்துக்கு பதிவாகும்.

இந்த தகவல்களைப் பெறுவதன் மூலம், விபத்துக்கான சரியான காரணத்தை தெரிந்து கொள்ள முடியும். எனவே, இந்த கறுப்பு பெட்டி ஆய்வுக்காக டில்லியில் உள்ள கறுப்பு பெட்டி ஆய்வு மையத்துக்கு அனுப்பப்பட்டது. 9 கோடி இந்திய ரூபா செலவில் உருவாக்கப்பட்டு, கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி திறக்கப்பட்ட இந்த நவீன ஆய்வு மையத்தில் கறுப்புப் பெட்டியில் இருந்த தரவுகள் மீட்கப்பட்டன. அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முதற்கட்ட அறிக்கையை சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்திடம் புலனாய்வு அமைப்பு வழங்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



# அமைதிக்கான நோபல் பரிசுக்கு டொனால்ட் ட்ரம்ப் தகுதியானவர்

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவிப்பு

அமைதிக்கான நோபல் பரிசுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தகுதியானவர் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள பெஞ்சமின் நெதன்யாகு, கடந்த திங்கள் கிழமை டொனால்ட் ட்ரம்ப்பின் இரவு விருந்தில் பங்கேற்றார். முன்னதாக, ட்ரம்ப்பிடம் நெதன்யாகு ஒரு கடிதம் வழங்கினார்.

அப்போது பேசிய அவர், "டொனால்ட் ட்ரம்ப் ஒன்றன் பின் ஒன்றாக நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் அமைதியை ஏற்படுத்துகிறார். எனவே, நோபல் பரிசு கொமிட்டிக்கு அனுப்பிய பரிந்துரை கடிதத்தை நான் தற்போது தங்களுக்கு வழங்குகிறேன். அமைதிக்கான நோபல் பரிசு பெற நீங்கள் தகுதியானவர். நீங்கள் அதைப் பெற வேண்டும்" என கூறினார்.

நெதன்யாகுவின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய டொனால்ட் ட்ரம்ப், "மிக்க நன்றி. நீங்கள் பரிந்துரை கடிதம் அனுப்பி இருப்பது எனக்குத் தெரியாது. குறிப்பாக, நீங்கள் என்னை பரிந்துரைத்திருப்பது உண்மையில் அர்த்தம் நிறைந்தது. மிக்க நன்றி. நான் போர்களை நிறுத்துகிறேன். மக்கள் கொல்லப்படுவதை நான் வெறுக்கிறேன்." என தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் இஸ்ரேல், காசா மீது நடத்தி வரும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்றும் போர் நிறுத்தத்துக்கு முன்வர வேண்டும் என்றும் ட்ரம்ப் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். போர் நிறுத்தத்துக்கு ஹமாஸ் ஆதரவு தெரிவித்துள்ளது. எனினும், ஹமாஸ் ஆயுதங்களை கீழே போடும் வரை போர் தொடரும் என இஸ்ரேல் கூறி வருகிறது. தங்கள் வசம் உள்ள பணயக்கைதிகளை ஹமாஸ் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அமெரிக்கா கூறி வருகிறது. எனினும், இந்த விவகாரத்தில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

முன்னதாக, ஈரான் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதாகக் கூறி அந்நாட்டின் மீது இஸ்ரேல் இராணுவ நடவடிக்கைகளை எடுத்தது. பின்னர், அமெரிக்காவும் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியது. அதன் பின்னர் அமெரிக்கா விடுத்த அழைப்பை ஏற்று ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகள் தங்கள் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்பின் வரி அச்சுறுத்தல்களுக்கு சீனாவும் ரஷ்யாவும் கண்டனம்

பிரிக்ஸ் கூட்டணி நாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுத்த வரி அச்சுறுத்தல்களுக்கு சீனா மற்றும் ரஷ்யா கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

பிரிக்ஸ் நாடுகள் மோதலுக்கான குழுவல்ல, எந்தவொரு மூன்றாவது நாட்டையும் குறிவைக்கும் நோக்கமும் இல்லை என்று சீனா தெரிவித்துள்ளது.

அதன்போது, வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தி பெறும் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பிற்கான முக்கியமான மேடையாக பிரிக்ஸ் உள்ளது என சீன வெளிவிவகாரத்துறை பேச்சாளர் மாவ் நிங் சுட்டிக்காட்டியுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப், பிரிக்ஸ் நாடுகள் மற்றும் அவற்றுக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளுக்கு கூடுதல் 10 வீத வரி விதிப்பதாக கூறியதற்கு பதிலளிக்க வகையில் அவின் இந்தக் கருத்துகள் வெளியாகியுள்ளது.

அது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட மாவ் நிங், "வர்த்தகப் போரும், வரிவிதிப்பு போரும் எந்தவிதமான வெற்றியையும் தராது.

வரிகளை மற்றவர்களை கட்டாயப்படுத்தும் ஒரு கருவியாகப் பயன்படுத்துவதற்கு சீனா எதிர்ப்பு தெரிவிக்கிறது. இது எந்தவொரு தரப்புக்கும் பயனளிக்காது." என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ட்ரம்பின் வரி அச்சுறுத்தில் குறித்து ரஷ்ய ஜனாதிபதி அலுவலகம் தெரிவிக்கையில்,



"பிரிக்ஸ் நாடுகள் வேறு எந்த நாட்டையும் பாதிப்பதற்கோ, பாதிக்க முயற்சிப்பதற்கோ ஒருபோதும் செயல்படவில்லை.

ட்ரம்பின் அந்தக் கருத்துகள் நமக்கு தெரியும். ஆனால் பிரிக்ஸ் நாடுகளின் தனித்துவம் என்னவென்றால், அவை ஒரே மாதிரியான அணுகுமுறைகளையும், ஒத்த உலகக் கோணத்தையும் பகிர்ந்து கொள்கின்றன.

அந்த ஒத்துழைப்பு எப்போதும் தங்கள் சொந்த நலன்களில் தான் அமைகிறது. அது ஒரு மூன்றாவது நாட்டுக்கு எதிராக ஒரு செயல் முறைதான் என்றால், அது தவறான புரிதல்." என தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -09.07.2025




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை. இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம். பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனைத் தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடவேண்டும். அது உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

உங்கள் பணிகளை திறம்படச் செயலாற்றுவீர்கள். அதே சமயத்தில் வேலையின் தொடக்கத்தில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. துணையிடம் அன்பான உரையாடல்களில் ஈடுபடலாம்.

உங்கள் தேவைகளுக்கு கடன் வாங்க நேரலாம். அதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படலாம். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உணவு முறை மேற்கொள்ளவும்.




இன்று நீங்கள் சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். பொறுப்புகள் காணப்படும். இன்று செய்யும் செயல்களை சரியாக திட்டமிட்டுச் செய்தால் நீங்கள் வெற்றி காணலாம்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாளாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் துணையிடம் உங்கள் நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கிய பிரச்சினை காணப்படும். அதற்காக செலவு செய்ய நேரும்.




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும்.குழப்பங்களும் கவலைகளும் நிறைந்திருக்கும். இன்று சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு உகந்த நாள் அன்று.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணி நிமித்தமான பயணம் இன்று காணப்படும். உங்கள் வேலைகளை திட்டமிடுவது இன்று முக்கியம்.

இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுபடுத்த வேண்டும்.

நிதி நிலைமை நீங்கள் எதிர்பார்த்தது போலன்றி எதிர்மறையான பலன்களைத் தரும்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக உங்களுக்கு கால் வலி ஏற்படலாம்.




இன்று சாதகமான நாள். உங்களின் முயற்சி சிறியதாக இருந்தாலும் வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று பணியில் சவால்களும் போட்டிகளும் நிறைந்து காணப்படும். இந்தச் சவால்களைத் திறமையாக சமாளிக்க வேண்டிய நிலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்வது நல்லது.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.




இன்று நீங்கள் பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். புதிய முயற்சிகள் எடுத்து அதில் வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மனநிலையில் இருப்பீர்கள்.

இன்று பணி நிமித்தமான பயணம் காணப்படும். உங்கள் பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விடாப்பிடியான எண்ணம் கொண்டு எந்த முயற்சியும் செய்யாதீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உறவில் நல்லிணக்கம் இருக்கும்.

இன்று அதிர்ஷ்டம் காணப்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உணவில் கவனம் செலுத்த வேண்டும். உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் -09.07.2025




இன்று மந்தமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாளாக அமையாது. முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தள்ளிப்போட வேண்டும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டத்தக்க வகையில் இருக்காது. பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்ளவும். இதனால் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைக்க முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. இன்று வரவும் செலவும் சேர்ந்து காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள். இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளைத் திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் காணப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று காதலில் முழு திருப்தி உண்டாவதற்கு உகந்த நாள். இன்று காதலில் புதிய அத்தியாயத்தை தொடங்குவீர்கள்.

நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால் இன்று அதிக லாபம் கிடைக்கும்.

நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். உடற்பயிற்சி மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியையும் மன ஆறுதலையும் தரும்.

பணி நிமித்தமான பயணங்கள் இன்று காணப்படும். பணியில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்குப் பொருத்தமான நாளாக உணர்வீர்கள். உங்கள் காதலை உங்கள் தந்தையிடம் கூறுவீர்கள். அது உங்களுக்குச் சாதககமாக இருக்கும்.

ஏழைகளுக்கு தொண்டு செய்து அவர்கள் ஆசி பெறுவதன் மூலம் உங்களுக்கு நற்பலன்கள் கிடைக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறபபாக காணப்படும்.

